விலை சதம் 25

# காந்தீயம்

மலர் 13 | காந்தி நிலையம்- உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 106) 1976 மே | இதழ் 8

**கடவுள்**

அகிம்சையும் சத்தியமுமே எனது கடவுள்.

—காந்திஜி

# சர்வோதயம் என்றால் என்ன?

## வினோபா கூறுகிறார்



இந்தியாவில் பல்வேறு இன மக்களும் ஒன்று சேர்ந்தே இருந்து வந்திருக்கிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக இவர்கள் அனைவரும் பேரன்போடு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த நாட்டை எல்லோருக்கும் பொதுவெனக் கருதி, எல்லோருமே இதனிடம் அன்பு கொண்டு இருந்திருக்கிறார்கள். நாமும் அதேபோல அன்பாக வாழ்ந்து வர வேண்டும். நம் அனைவரிடையிலும் அன்புறவு நிலவ வேண்டும். இங்குள்ள எல்லாச் சமயத்தினரும், பல்வேறு மொழிகள் பேசுவோரும், எல்லாப் பிரதேசத்தவரும் ஒருவர் மற்றவரிடம் அன்புடன் இருந்து வருதல் அவசியமாகும்.

### மூன்று உபாயங்கள்

இவ்வாறு நம்மிடையே அன்பு இருந்து வருவதற்கு, நாம் அன்பாக வாழ்ந்து வருவதற்கு, மூன்று உபாயங்கள் பெரிதும் உதவும்.

### பிரார்த்தனை முறை

அவைகளில் ஒன்று நாம் எல்லோரும் சேர்ந்து அமர்ந்து கடவுளை நினைந்து வழிபாடு செய்தலாகும். நாம் எல்லோருமே ஒரே இறைவனின் பிள்ளைகள். ஆகையால் இந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியரும் கிறிஸ்தவர் முதலிய எல்லோரும் ஒரே இடத்தில் உட்கார்ந்து ஆண்டவன் பெயரைச் சொல்ல வேண்டும். கடவுள் வழிபாடு, பிரார்த்தனை என்றால் அதில் தோத்திரப் பாடல்கள் பாடியே ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லை. பிரார்த்தனைகளில் எல்லாம் சிறந்தது மௌனமாகச் செய்யப்படும் பிரார்த்தனையே. எல்லோரும் சேர்ந்தமர்ந்து ஐந்து நிமிட நேரம் மௌனமாய் இருந்தபடியே மனத்தில் அவரவருக்குப் பிடித்தமான பகவானின் பெயரை நினைந்து கடவுளுடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். பிரார்த்தனை செய்வதற்குள்ள ஒப்பற்ற முறையாகும் இது. இதனால் நம் அனைவர் உள்ளங்களும் ஒன்றாய் இணைந்து விடவும் நம்மிடையே அன்புறவு தோன்றும்

### இனிய உறவுக்கு வழி

இரண்டாவது, நாம் எல்லோரும் ஒருவர் மற்றவர் மொழியைக் கற்றுக் கொள்ளுதலும் மற்றவர் நூல்களை ஓதி உணர்தலும் ஆகும். ஒவ்வொருவரும் தம் தாய்மொழியோடு பிறர் மொழிகளையும் பயில வேண்டும். மராத்தி அல்லது வங்காளி மொழியுள்ளவர்கள் இந்தியும் கற்றுக் கொள்ள வேண்டும். இதே போல மராத்திக்காரர்கள் வங்காளியையும் ஒரியாவையும் தமிழையும் பயில வேண்டும். இதே போல வங்காளிகள் இந்தி அல்லாமல் இன்னும் ஒன்றிரண்டு இந்திய மொழிகளில் பயிற்சி பெறுதல் விரும்பத்தக்கது. இந்திக்காரர்கள் இன்னும் ஒன்றிரண்டு மொழிகளில் பழக்கம் பெறுவது நல்லது. இவ்வகையில் முயற்சி செய்தால், பிற மொழிகளையும் பயின்றால் அனைவரிடையிலும் இனிய உறவு அதனாலேயே உருவாகும்.

### பிற மதங்களை அறிதல்

இதன் மற்றொரு பகுதி ஒருவர் மற்றவர் சமய நூல்களைப் படித்தலும் அவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதலுமாகும். இப்போது முஸ்லிம்கள் தம் குர்ஆனைத் தவிர வேறு எந்த சமய நூலையும் பார்ப்பதே இல்லை. கிறிஸ்தவர்களும் அப்படித்தான். அவர்களுக்கு தமது விவிலியத்தை தவிர வேறு எதுவுமே தெரியாது. இந்துக்களும் கீதையை பாராயணம் செய்வார்கள். பாகவதம் படிப்பார்கள். வேறு எந்தச் சமய நூலைப் பற்றியும் அவர்களுக்குத் தெரியாது. படிக்கவே மாட்டார்கள். இவ்வாறு பல்வேறு சமயத்தினரும் தாமுண்டு, தம் சமய நூல்களுண்டு என்று அவைகளுடனேயே கட்டுண்டு இருந்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் சித்தம் ஒரு சார்பினதாய் ஆகிவிடுகிறது. உலகில் தம் சமயம் ஒன்றுதான் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு விடுகிறார்கள். இவ்வாறு எண்ணுதல் சரியல்ல. நம் சித்தம் விரிந்து பரந்துவிட வேண்டும். ஆனால் இதிலுள்ள ஒரு சிரமம் எந்த சமயத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலுள்ள நூல்கள் மிகவும் பெரியவையாய் இருப்பதாகும். அவை ஒவ்வொன்றையும் படிப்பதென்பது சுலபமாய் இல்லை. அதற்குத் தேவையான நேரம் கிடைப்பதில்லை. இந்த சிரமத்தை குறைப்பதற்கு நான் சிறிது முயற்சி செய்திருக்கிறேன். சமய நூல்களைச் சுருக்கி அவைகளின் சாரத்தை வெளியிட்டிருக்கிறேன். குர்ஆன் மிகவும் பெரிய புத்தகம். அதைப் படித்தல் எளிதல்ல என்பதை உணர்ந்த நான் ''குர்ஆனின் சாரம்'' என்ற பெயரில் அதன் சுருக்கம் ஒன்று வெளியிட்டிருக்கிறேன். குர்ஆனைப் போலவே சீக்கியர்களுக்கு ''ஜபுஜி'' என்ற புத்தகம் இருக்கிறது. அது அவ்வளவு பெரியது

(7 ஆம் பக்கம் பார்க்க)

# நூல் நயம்

நூல்:- 'சீதனக் கொடுமை ஒழிக'.
ஆக்கம்:- ஈழத்துச் சிவானந்தன்.
மதிப்பீடு:- மூ. பொன்னம்பலம்.
வெளியீடு:- கல்யாணம் வெளியீடு, புங்குடுதீவு.
விலை:- ரூபா ஒன்று.

கல்வித்துறையில் அதிகம் முன்னுக்கு நிற்கும் தமிழ்ச் சமுகத்திடையேதான் அதற்கு முரணான, அச்சமுகத்தை என்றும் வளரவிடாமல் பின்னுக்கிழுக்கும் காலங்கடந்த கொள்கைகளும் செழித்து வளருகின்றன. இன்று தமிழ்ச் சமுகம் அல்லாவி நிற்கும் விடுதலைக்கு தமிழரால் உற்பத்தியாக்கப்பட்ட இக்கொள்கைகளே முக்கிய பெருந்தடைகளாக முன்னுக்கு நிற்கின்றன. ஆலயங்களுக்குள் ஹரிஜனங்களைத் தள்ளிவைத்தல், தண்ணீர் கிணறுகளில், ஓட்டல்களில், சிகை அலங்காரக் கடைகளில் தீண்டாமையைப் பாவித்தல் போன்ற சமுக ஏற்றத்தாழ்வுகளைப் பேணுதல், பொருளாதார நோக்கில் தனியுடமைக்கு அதிக சார்பாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் போன்றவையே கற்றறிந்த தமிழினத்தின் பின்னணியாகும் அதுவே இவர்களைப் பின்னுக்கிழுக்கும் தடையுமாகும். இப்பின்னணியில் இவற்றிற்கு ஒப்பான இன்னொரு கொடுமையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்- அதுவே சீதனக் கொடுமை. இக்கொடுமையால் தமிழ் மக்களிடையே வாழாவெட்டிகளாக, 'புகையுண்ட' முகங்களாகக் காட்சி தரும் தமிழ்ப் பெண்கள் ஏராளம்! ஏராளம்! சகல மக்களின் விடுதலை உணர்விலும் சமபங்கு வகிக்கும் சக்தி மிக்க பெண்களை வாழாவெட்டிகளாக வைத்துக்கொண்டு விடுதலை நாட்டம் காணும் கற்றறிந்த தமிழரை என்னவென்று அழைக்கலாம்?

இச்சந்தர்ப்பத்தில் தான் நண்பர் ஈழத்துச் சிவானந்தன் இவற்றுக்கெல்லாம் பரிகாரம் காண்பது போல் 'சீதனக் கொடுமை ஒழிக' என்னும் நூலை நம்முன்னே வைத்துள்ளார். சமுகக் கொடுமைகளுள் ஒன்றான சீதனக் கொடுமையை உடனேயே ஒழிக்க வேண்டுமென்ற வேட்கையுடன் எழுந்த குரல் அது. ஆரம்பத்தில் சீதன முறை தமிழரிடையே எவ்வாறு பிறருக்கு உதவும் நன் நோக்குடன் தோன்றி பின்னர் படிப்படியாக எப்படி சுயநலத்தை கட்டி வளர்க்க உதவிற்று என்பதை சங்க இலக்கிய ஆதாரங்களுடன் அழகுறக் கூறியுள்ளார் புலவர் சிவானந்தன்.

இன்று இச்சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகைகள் கூறும்போது, நிலங்களுக்கு அரசாங்கம் இன்று விதிக்கின்ற உச்சவரம்பின் அளவு முறை தமிழ்ப்பகுதிக்கு பற்ருது என்பதோடு சீதனத்துக்கும் இப்படி ஒரு சட்டத்தை அரசு இயற்ற வேண்டும் என்று சிவானந்தன் காட்டியுள்ளது நமது பாராட்டுக்குரியது. அரசாங்கம் சட்டமியற்றி இதைத் தடை செய்வது ஒரு முக்கிய வழி. ஆனல் அதே நோக்கில் அரசாங்கத்தை மட்டும் எதிர்பார்த்திராது இதை அகற்றுவதற்கு கற்றோர் எங்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும், அவ்வியக்க சக்தியே திய குரலோடுதான் எல்லோரையும் அழைக்கிருர் சிவானந்தன். அப்படி நான் சொல்வதற்கும் காரணம் உண்டு.

இவர் பல வருடங்களுக்கு முன்பிருந்தே இச்சீதன முறையின் கொடுமைகள் பற்றிச் சிந்தித்தும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மேடைகளில் அதற்கெதிராக முழங்கியும் வந்துள்ளார். இன்றேல் அத்துடன் நில்லாமல் அதை ஒழிப்பதற்கு இயக்கமொன்றையே ஆரம்பித்து புங்குடுதீவில் இயக்கி வருகிருர். இன்று சர்வோதய நோக்கில் சகல மக்களினது விடுதலைக்கும் குரல் எழுப்பும் புத்திஜீவிகளும், அரசியல் தலைவர்களும் இவரையும் தம் மணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சீதனக் கொடுமைக்கு நிவாரணம் அளிக்க நாம் இக்கொள்கையை முன் வைக்கும் அதே நேரத்தில் இந்நோக்கிலிருந்து மாறுபடும் வேருெருபார்வையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அதுதான் மார்க்ஸீயப் பார்வை. மார்க்ஸீயப் பார்வையில் இக்குறைபாடுகள் எல்லாம் வர்க்கரீதியில் பிளவுபட்டு நிற்கும் சமுகத்தின் வெளிக்காட்டல்கள் எனலாம். ஆகவே இதை நீக்க அவர்கள் தரும் மருந்து சோஷலிஸப்புரட்சியாகும். சோஷலிஸப் புரட்சி எற்படும்போது வர்க்க முரண்பாடுகள் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, சமுகத்தின் குறைபாடுகளான சாதிப் பிரச்சனை, சீதனப்பிரச்சனை போன்றவையெல்லாம் தானகவே அகற்றப்பட்டு விடுகின்றன.

ஆனல் நாம் ஒரு கேள்வி கேட்போம். இப்போ இப்புரட்சி எப்போ வரும்? வந்தாலும் இவற்றை இப்புரட்சி மூலம் வன்முறையில் தீர்த்து வைத்தால் இவை மக்களின் மனதில் அடக்கி வைத்த ஆசைகளாக இருந்து வேறு எதிர்ப்புரட்சிகளுக்கும், திரிபுவாதங்களுக்கும் காலாகாமல் இருப்பதற்கு இப்பவே அகிம்சை ரீதியில், மனங்களைப் பக்குவப்படுத்தி சர்வோதய நோக்கில் தீர்த்து வைப்பது சாலவும் சிறந்தது. இயற்கை வைத்தியம் போன்றது இது. இப்பார்வையில் சிவானந்தன் அவர்களின் நூல் ஓர் முக்கிய வழிகாட்டியாக அமைகிறது. வடபகுதியில் தமிழ் மக்களிடையே மட்டுமல்லாமல் எங்குமே சீதனக் கொடுமை மூலம் கட்டுண்டு கிடக்கும் 'சக்தி'களை விடுதலை பெற வைப்பதற்கு இந்நூல் காலெடுத்து வைக்கிறது.

## அன்பர் தபால்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் சர்வோதயக் கருத்தரங்கம் மாச்சு 14 ஆம் திகதி திருக்கோணமலையில் நடைபெற்றதாக அறிந்தேன்; ஆனந்தமடைந்தேன். மகாத்மா காந்தியின் சர்வோதய தத்துவத்தை மக்களிடையே பரப்பி நற்சமுதாயத்தினை எதிர் காலத்தில் தோற்றுவிப்பதற்கான அளப்பரிய இச் சேவை வாழ்க என வாழ்த்துகிறேன். மேலும் கருத்தரங்குகளை வைப்பதனுல் மட்டும் நமது சமூகத்தை நல்வழிப்படுத்துவது சிரமமாக இருக்கலாம். உறுப்பினர்களையும் பிரதிநிதிகளையும் கொண்டு மக்களிடையே சர்வோதயக் கொள்கைகளைப் பரப்பத் திட்டமிட வேண்டும்.

மேலும், இன்றைய இளம் தலைமுறையினரான பாடசாலைச் சிறுர்களிடையே எமது கருத்துக்களைப் பரப்பினுல் இளம் உள்ளங்கள் எதிர் காலத்தில் சர்வோதயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் வழிகாட்டச் சந்தர்ப்பம் ஏற்படும். நானும் சர்வோதய இயக்கத்திலீடுபட்டு பணிபுரிய ஆவலுடையவனுக இருக்கிறேன்.

வடமுனை, வி. வீ. குணசேகரன்
வெலிக்கந்தை.

## காந்தி சேவா சங்கத்தின்

# இருபத்தேழு ஆண்டு சேவை

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 27 ஆவது ஆண்டு அறிக்கை

இச் சங்கத்தின் 26 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் தாமதமாக 23.11.75 இல் நடைபெற்றது. இதன் பின் நான்கு நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

### சர்வோதய கருத்தரங்கம்

மாவட்டங்கள் தோறும் சர்வோதய கருத் தரங்குகளை நடாத்தும் திட்டத்திற்கமைய மூன்றாவது கருத்தரங்கம் 1976 மாச்சு 14 ஆம் திகதி திருக்கோணமலையில் சிறப்பாக நடைபெற்றது. அடுத்த கருத்தரங்கத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்துவதற்காக ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

காந்தீய-சர்வோதய சிந்தனையாளர்களின் உயர் மட்டக் கருத்தரங்கு 26.04.76 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் சர்வோதய, இயக்கத்திற்கு வழிகாட்டக் கூடியதாக 'கைநூல்' தயாரிக்க வேண்டுமென்று தீர்மானிகப்பட்டதுடன் காலத்துக்குக் காலம் சிந்தனையாளர்கள் கூடி ஆலோசிப்பது நல்லதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்புக் கிளையின் ஆதரவுடன் மாதந்தோறும் கொழும்பில் சர்வோதயக் கருத்தரங்கை நடத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

### காந்தி நிலையம்

கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் சங்க ஆதரவில் உள்ள காந்தி நிலையத்தில் 25 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, உடை, கல்வி முதலியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. தோட்டச் செய்கையில் மாணவருக்கு விசேட பயிற்சி அளிக்கப்படுகிறது. நிலையம் அறுபது சத வீதம் சுயதேவைப் பூர்த்தியை அடைந்துள்ளது. குறித்த ஆண்டில் எதிர்பார்த்த வருமானம் சரிவரக் கிடைக்காமையால் நிதி நிலையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வளர்ந்த மாணவர்கள் நிலையத்தை விட்டுச் செல்வதால் நிர்வாக உதவிக்கும் போதிய ஆட்கள் இல்லாமலிருக்கிறது. நிலையத்தில் 75 மாடுகளைக் கொண்ட பண்ணை உண்டு. இவைகளை நன்கு பராமரிப்பதற்கு கட்டடம் அவசியம் கட்டப்பட வேண்டும்.

### காந்திக் கிராமம்

காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாக கிளிநொச்சி - அக்கராயன்குளத்தில் அரசாங்கம் வழங்கிய 300 ஏக்கர் நிலத்தில் காந்திக் கிராமம் உருவாகி வருகிறது இதன் வளர்ச்சிக்கு இலங்கை பட்டினி ஒழிப்புச் சபை மூலம், ஒல்லாந்து தேசத்து சமூகசேவை இயக்கத்தின் ஆதரவு கிடைக்கவுள்ளது. இதற்கு முன்னோடியாக பட்டினி ஒழிப்புச் சபை பதினையாயிரம் ரூபாவை குறைந்த வட்டிக்கு கடனாக உதவியுள்ளது. இங்கு 1976 ஒக்ரோபர் இரண்டாம் திகதி (107 ஆவது காந்தி ஜயந்தி விழாவின்போது) இளைஞருக்கான பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிககப்பட்டுள்ளது.

### சர்வோதய நிகேதனம்

இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப்பெற்றுள்ள சர்வோதய நிகேதனம் கொழும்புக் கிளையின் ஆதரவில் செயல் படுகிறது. இங்கு சர்வோதய அச்சகம் உண்டு. இதன் உதவியுடன் இளைஞருக்கு அச்சு தொழிற் பயிற்சி அளிப்பதுடன் 'காந்தீயம்' பத்திரிகையையும் வெளியிடுகிறோம். இதன் நிர்வாகச் செலவுகளுக்காக 300 வீடுகளில் சர்வோதய பாத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### சர்வோதய ஆசிரமம்

நீர்வேலியிலுள்ள சர்வோதய ஆசிரமம் சிறிது காலம் இயங்காமலிருந்து இப்போது இயங்கத் தொடங்கியுள்ளது. இங்கு ஊழியரொருவர் முழு நேரத்தைச் செலவிட முடியுமாயின் ஆசிரமத்தைச் சிறப்பாக நடத்த முடியும்.

### அன்னை கஸ்தூரிபாய் நிலையம்

பரந்தன் - முல்லைத்தீவு தெருவிலுள்ள தர்மபுரத்தில் அமைந்துள்ள அன்னை கஸ்தூரிபாய் நிலையத்தில் மில்க்வைற் நிறுவனத்தாரின் உதவியுடன் பெரிய கிணறு அமைக்கப்பட்டுள்ளது. பல வழிகளாலும் துயருறும் தாய்மாருக்கும் பெண்களுக்கும் புனர்வாழ்வளிக்க இந் நிலையத்தின் மூலம் முயற்சி செய்யப்படும். இப் புனித பணிக்கு பணம் அதிகம் தேவை. செல்வி. க. சரவணமுத்து B. Sc அவர்களது தலைமையில் இதற்கான நிர்வாக அமைப்பு இயங்கி வருகிறது.

### ஆட்டுப் பண்ணை

வெள்ளவத்தை, திருமதி விஜயரத்தினம் அவர்கள் உதவிய 6 ஆடுகளுடன் ஆட்டுப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை காந்திக்கிராமத்தில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.

### கிளைகள்

யாழ்ப்பாணம், வவுனியா, திருக்கோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் கிளைகள் நிறுவப்பெற்றுள்ளன.

### பாராட்டு

சமூகசேவைக் கல்லூரி அதிபரும், சிறுவர் நல்நடத்தை பரிபாலனப் பகுதி ஆணையாளரும் காந்தி நிலைய மாணவர் இல்லத்திற்கு வருகை தந்து தோட்ட முயற்சிகளை பாராட்டியுள்ளனர்

### வேண்டுகோள்

சங்கத்தின் பணிகள் விரிவடைந்து வருவதால் அங்கத்தவர், அனுதாபிகள் அனைவரதும் ஆதரவை வேண்டுகிறோம்.

சி. க. வேலாயுதபிள்ளை
கௌரவ பொதுசெயலாளர்

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 106
1976 மே


## கருத்தும் செயலும்

காந்தி சேவா சங்கம் இலங்கையில் தோன்றி 27 ஆண்டுகள் கழிந்து விட்டன. காந்தி சேவா சங்கம் சாதித்தது என்ன என்று ஒரு கேள்வி யார் மனதிலும் தோன்றல் கூடும். மகாத்மாவின் பெயரால் ஒரு சபை நிறுவி அவர் கருத்துக்களைப் பரப்பியும் ஒரு தாபனத்தையும் நிறுவிப் பரிபாலித்தும் வருகிறது இச்சங்கம். கருத்துக்களைப் பரப்புவதில் ஓரளவிற்குப் பணி புரிந்து வருகின்றது என்றாலும் நிர்மாணத் திட்டம் அளவில் பாரிய பணி புரிந்து விட்டதென்று நாம் பெருமைப்பட முடியாது. இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது.

நிர்மாணப் பணியைப் பொருளாதார வளர்ச்சி கொண்டு தான் உலகம் அளக்கும். இவ்வியக்கத்தால் ஒரு சிறுவன் சம்பாதித்த அறிவு, ஒழுக்கக் கட்டுப்பாடு கொண்டு நிர்மாணப் பணியின் தகுதியை உலகம் அளக்காது. இனி அடுத்து வரும் ஆண்டுகளில் பொருளாதார மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு சங்கம் பணியாற்ற வேண்டும் என்பது பல தொண்டர்களின் கருத்து. உண்மையில் பொருளாதார வழியில் காந்தி சேவா சங்கம் சில திட்டங்களை வகுத்து அவற்றை ஊழியர் மூலம் நிறைவேற்றினால் நல்லதே. அத்திட்டங்கள் பற்றித் தொண்டர்கள் சிந்தித்தல் நன்று.

மகாத்மா இருந்த காலத்தில் விபரமான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அதற்கு அன்றிருந்த அரசியல் நிலையே காரணம். இப்பொழுது நாம் நம் நாட்டு நிலைமையையும் பொருளாதாரச் சூழல், சூழல் வளம் இவற்றை மனதில் கொண்டு செயற்பட வேண்டும். எங்கெங்கு மூலப் பொருள்கள் உள்ளன? எவற்றைக் குடிசைக் கைத்தொழில் முறையில் உற்பத்திக்கு, கைத்தொழில் பொருளுக்கு உபயோகிக்கலாம் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். பாரிய மூலதன முதலீடு இல்லாமல் செய்யக் கூடிய கைத்தொழில்களிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்த விசாரணையில் அரசினர் சிறு கைத் தொழில் திணைக்களத்தின் அறிவுரைகளைப் பெறுவதும் பயன் தரக் கூடியதாகும். இன்னும் சேவா சங்க ஆதரவாளர்களுள் தொழினுட்பம் தெரிந்தவர்களின் ஆதரவையும் பெறல் நன்று. இவ்வாறு சேவா சங்க ஆதரவாளர்கள் உள்ள கிராமங்களில் முதன் முதலாக யாதாயினும் ஒரு வேலைத்திட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். அதற்கு அக்கிராமத்திலுள்ள தொண்டர்களும் அபிமானிகளும் சேர்ந்து உழைத்தல் வேண்டும். இப்படியாக நாம் இரண்டு மூன்று இடங்களில் இப் பணிகளைத் தொடக்கினோமானால், மற்றை இடங்களில் அவ்வாறு நிறுவுதல் கடினமாயிராது.

இத்தகைய திட்டங்கள் நேரான ஒரு நல்ல அரசாங்க உத்தியோகமளவு திருப்தியை இளைஞர்க்கு அளிக்கமாட்டா என்பதுண்மை. எனவே இத்தகைய திட்டங்கள் ஆரம்ப காலத்தில் வேலையில்லாதிருப்போரையும் முழு நேர வேலையில்லாதிருப்போரையும் மட்டும் ஈர்க்கும் தகைமை உடையதாயிருந்தால் போதுமானது. மற்றை ஆடம்பர வாழ்விற்காவும் போலிக் கௌரவத்திற்காகவும், இத்திட்ட வேலை உத்தியோகத்தரம் குறைந்தது என்ற தப்பெண்ணத்தால் கிராமக் கைத்தொழில் இயக்கங்களில் பங்கு பற்ற மனமில்லா இளைஞர்க்கு அறிவூட்டுவதும் திசை காட்டுவதும் சேவா சங்கத்தின் ஒருநோக்கமாயும்இருத்தல் வேண்டும் மகாத்மாவின் பொருளாதாரத் திட்டங்கள் இரண்டு காரணங்களால் தான் ஒப்பேற முடியும். இயல்பாகவே அவை மிகை இலாபத்தை நோக்காகக் கொள்ளாமையால் அத்திட்டங்கள் பலரைக் கவரா. ஆகவே அவற்றிலீடு படக் கூடியவர்கள் (1) ஒருவித வருவாயுமில்லாமலிருப்பவர்கள் அல்லது (2) இலட்சிய பூர்வமாக மிகை இலாபத்தை விரும்பாதுமட்டான ஒரு தரமுடைய வாழ்வை விரும்புபவர்கள். இதனை மனதில் நாம் கொண்டால், நாம் வகுக்கும் திட்டங்களை யாரை நோக்கி வகுக்க வேண்டுமென்பது புலனாகும். ஒருவித பொருள் வருவாயுமில்லாதவருள்ளும் குறைந்த வருமானத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளப் பல இளைஞர்கள் முன் வரமாட்டார்கள். இது அவர்களிடம் காணப்படும் இலட்சியக் குறைபாட்டினாலேயாம்.

எனவே நிர்மாணத் திட்டத்தின் ஒரு பகுதியாக சேவா சங்கம் காந்திய பொருளாதாரம் அனைத்துலகிற்கும் எல்லாக் காலத்திற்கும் இயைந்த ஒரு செவ்விய திட்டம் என்ற கருத்தைமக்களிடை பரப்புவதற்கும் சதா பாடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இந்தக் கருத்துப் புரட்சியும் ஆக்க வேலைகளோடு இயைந்து சென்றால் தான் நிர்மாணமும் பலன் தரும். கருத்தும் செயலும் அப்பொழுது தான் ஒன்றுக்கொன்று ஆதாரமாக நின்று பொருள் தரும்.

அபரிமித நுகர்வே உலகின், போட்டி, இம்சை, போர், சுரண்டல் ஆகியவற்றிற்கு அடிப்படைக் காரணம் என்பதையும், மட்டான வாழ்வும் மிதமான நுகர்வுமே, உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, அமைதி அறிவுத் தெளிவு, உலக ஒற்றுமை என்பவற்றிற்கு அடிப்படை என்பதையும் நாம் எடுத்துக் காட்டக் கூடிய முறையில் பணியாற்ற வேண்டும்.

---

### வரப்பெற்றோம்

இலங்கை இந்து
அகில இலங்கை இந்து மாமன்ற
வெளியீடு
75, ஸோறன்ஸ் வீதி
கொழும்பு—4

★ ★ ★ ★

அறிவொளி
முத்தமிழ் விழா மலர்
ஆசிரியர்: பொ சக்தி வேல்
அறிவொளி மன்றம்
1401 / 6 புதுச் செட்டி தெரு
கொழும்பு—13

* ★ ★ ★

வட கொழும்பு
இந்து பரிபாலன சங்கம்
இருபத்திரண்டாவது ஆண்டு
அறிக்கை
68, கோவில் வீதி
கொழும்பு—15

# காந்தி சேவா சங்கத்தின் விவசாயம்

| | செலவு ரூபா | சதம் | வரவு ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| 1964 | 742 | 70 | 1295 | 50 |
| 1965 | 705 | 65 | 1285 | 15 |
| 1966 | 2932 | 58 | 2850 | 45 |
| 1967 | 5363 | 05 | 8065 | 63 |
| 1968 | 17492 | 04 | 18210 | 00 |
| 1969 | 13848 | 70 | 15089 | 60 |
| 1970 | 16257 | 77 | 17930 | 42 |
| 1971 | 13038 | 89 | 22273 | 65 |
| 1972 | 12176 | 54 | 23587 | 28 |
| 1973 | 12994 | 41 | 18905 | 70 |
| 1974 | 22629 | 47 | 34958 | 71 |
| 1975 | 5779 | 79 | 15459 | 85 |
| மொத்தம் | 129961 | 59 | 179911 | 94 |

## காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தா திரட்டிய வருமானம்

| | | | |
|---|---|---|---|
| 1962 | —— | 11802 | 28 |
| 1963 | —— | 9186 | 32 |
| 1964 | —— | 13982 | 42 |
| 1965 | —— | 28768 | 43 |
| 1966 | —— | 20027 | 16 |
| 1967 | —— | 34669 | 55 |
| 1968 | —— | ?9484 | 46 |
| 1969 | —— | 38964 | 73 |
| 1970 | —— | 32891 | 23 |
| 1971 | —— | 34672 | 36 |
| 1972 | —— | 33055 | 66 |
| 1973 | —— | 80337 | 10 |
| 1974 | —— | 63925 | 85 |
| 1975 | —— | 68032 | 51 |
| மொத்தம் | | 5,09800 | 06 |

### ஆண்டு பொதுக் கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 27 ஆண்டு பொதுக்கூட்டம் 1976 யூன் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு. ப. 9-30 மணி தொடக்கம், யாழ்ப்பாணம் விபுலாநந்த அச்சகம்—புத்தகசாலை மேல் மாடி மண்டபத்தில் நடைபெறும்.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### செல்மதி நாஙுவிதம்

| | | |
|---|---|---|
| முதலியார் | | |
| செ. சின்னத்தம்பி | 500 | 00 |
| திரு. K. கதிரவேலு | 1000 | 00 |
| '' சி.க. வேலாயுதபிள்ளை | 1,400 | 00 |
| காந்தி அச்சகம் | 245 | 00 |
| திருமதி. வ. இராமலிங்கம் | 50 | 45 |

### ஞாபகார்த்தம்

வெள்ளவத்தை—விவேகானந்த அவென்யூ டக்டர். பி. அருமைநாயகம் அவர்கள் தம் தாயாரின் ஞாபகார்த்தமாக, இரத்மலானை சர்வோதய நிகேதன் மாணவர்களுக்கு 50 ரூபா அன்பளிப்புச் செய்துள்ளார்.

### வருந்துகிறோம்

''இன்றைய தேவை கருத்துப் பிரசாரமே. நாம் வாழும் சகாப்தம் பிரசார யுகத்தைச் சேர்ந்தது. எனவே காந்தீயம் ஒழுங்காக வெளிவர வேண்டும்''

என்று எம்மை ஊக்கியும் பொருளுதவி செய்தும் வந்த பேரருள் ஞானி திரு. க. இராமச்சந்திரா அவர்களின் மறைவு ஈடிணையற்ற பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம். சாந்தி!

## நல்லாசிகள்

சுய நலமற்ற சேவையால் காந்தீயம் வளரட்டும். தற்கால அமைதி இன்மைக்கு அது மா மருந்து

50 ரூபாவுக்கு காசோலையை அனுப்பியுள்ளேன் சுபம்!

ஆ. வே. வேற்பிள்ளை

சபர்மதி தோட்டம்,
பளை

### அடுத்த இதழில்......

வடஇந்திய சர்வோதய யாத்திரை கட்டுரையும், காந்தி ஜயந்தி விழா பேச்சுப் போட்டி பற்றிய விபரங்களும் வெளிவரும்

### யாழ். இந்துக்கல்லூரி சாரணர்களின் சிரமதானம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள், 1976 யூன் 20 ஆம் திகதி இரத்மலானை, சர்வோதய நிகேதனத்திற்கு வருகை தந்து சிரமதானம் செய்வார்கள்.

### சர்வோதய கருத்தரங்கு

வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 1976 யூன் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 6 மணிக்கு சர்வோதயகருத்தரங்கு நடைபெறும் இக்கருத்தரங்கில்பேராசிரியர் திரு. கு. நேசையா அவர்கள் மகாத்மா காந்தியும் அரசியலும் என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குவார்,

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர அரசியலில் பங்கேற்காமல் எமது இலட்சியங்களையும் நோக்கங்களையும் அரசுக்கு தெரியப்படுத்தி அரசின் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற வேண்டும்.

பாபாவின் உரைக்குப் பின் பாபா மௌனமாக இருந்த ஓராண்டுக்குள் மறைந்த பெரியார்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிர்மாண ஊழியர்கள் மகா நாட்டின் இறுதி நாள் பாபா, நிர்மாணப் பணிகளின் அமைப்பும் நிர்வாகமும் முன்னேற்றமும் எப்படியான முறையில் அமைய வேண்டுமென்பதை தெளிவாக விளக்கினார்.

பாபாவின் தரிசனம் கிடைத்ததை என் வாழ்வின் பெரும்பேறாக எண்ணி எல்லோருக்கும் நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டேன்.

—க. வி. தங்கவேல்

# அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

## 1975 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய கணக்கு

### வரவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| நன்கொடைகள் | 16,318 | 38 |
| உறுப்புரிமைப் பணம் | 95 | 00 |
| விடுதிச் செலவுகளுக்கான உதவுதொகை | 290 | 00 |
| அரசாங்க உதவிப் பணம் | 13,214 | 45 |
| விவசாயத்திலிருந்து வருமானம் | 15,459 | 85 |
| வட்டி | 80 | 33 |
| சர்வோதய பாத்திரம் | 2545 | 78 |
| ஆயுள்வேத வைத்திய நிலைய வாடகை | 860 | 00 |
| இழுவையந்திரம் (ட்ருக்டர்) | 5370 | 00 |
| கால்நடைகள் | 2730 | 00 |
| கலாச்சார சபை | 250 | 00 |
| நாணுவிதம் | 1,648 | 72 |
| சிரமதானம் | 7,120 | 00 |
| கிணற்றுக்கான நன்கொடை | 2,050 | 00 |
| | 68,032 | 51 |

### செல்பதி விபரம்

| | | |
|---|---|---|
| திருமதி.ச தம்பிப்பிள்ளை | 2,000 | 00 |
| கரைச்சி, தெற்கு ப. நோ. கூ. ச. | 2171 | 50 |
| திருமதி. T. இரத்தினம் | 3,000 | 00 |
| பட்டினி ஒழிப்புச் சபை | 15,000 | 00 |
| திரு. S. இராசரத்தினம் | 500 | 00 |
| திரு. M. கதிரவேலு | 1,000 | 00 |
| திரு. T. இராசையா | 5,000 | 00 |
| திரு. க. கனகராசா | 1,000 | 00 |
| திரு. T. தாசியஸ் | 3,631 | 00 |
| திரு. P. சின்னையா | 440 | 00 |
| திரு. சு. கந்தையா | 700 | 00 |
| திருமதி. சிவபாக்கியம் | 1,600 | 00 |
| | 36,042 | 50 |

### செலவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| விதை நெல் | 1,515 | 00 |
| சம்பளமும் கூலிகளும் | 6,654 | 30 |
| விடுதிச் செலவு | 16,322 | 49 |
| மாணவருக்கான புத்தகம், ஏனையவை | 742 | 30 |
| வெளிச்சம் | 892 | 75 |
| பிரயாணம் | 1.642 | 30 |
| வைத்தியம் | 336 | 72 |
| உடுப்பு, சலவை | 488 | 05 |
| சிகை அலங்காரம் | 270 | 25 |
| தபால், தந்தி | 519 | 30 |
| தொலைபேசி | 457 | 70 |
| சுகாதாரம் | 73 | 00 |
| பழுது பார்த்தலும் புதுப்பித்தலும் | 771 | 80 |
| விழா | 121 | 45 |
| கரைச்சி ப. நோ. கூ. சங்கத்திற்கு வட்டி | 185 | 70 |
| விவசாயச் செலவுகள் | 5,779 | 79 |
| வங்கிக் கட்டணம் | 15 | 10 |
| ஏற்றியிறக்கல் | 78 | 00 |
| கால்நடை உணவு | 497 | 25 |
| அனைத்துலக சிறுவர் தினம் | 61 | 00 |
| அச்சுக் கூலி எழுது உபகரணங்கள் | 938 | 95 |
| கணக்காய்வுக் கட்டணம் | 425 | 00 |
| தோட்டம் | 29 | 53 |
| அநுமதிப்பத்திரங்கள் | 203 | 82 |
| விளம்பரம் | 59 | 00 |
| குத்தகை | 149 | 50 |
| பரிசளிப்பு | 105 | 15 |
| கூட்டச் செலவு | 376 | 95 |
| இழுவையந்திர காப்புறுதி கட்டணம் | 569 | 41 |
| நாணுவிதம் | 224 | 30 |
| தேய்மானம் - கட்டடங்கள், தளபாடம் | 4,101 | 64 |
| இழுவையந்திரச் செலவு | 1758 | 92 |
| செலவு நீக்கி வருமானம் | 21666 | 09 |
| | 68,032 | 51 |

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வோதயம்............

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இல்லையாயினும் அதிலிருந்தும் சில முக்கியமான பகுதிகளைப் பொறுக்கிச் சேர்த்து அவைகளுக்கு விளக்கமும் தந்திருக்கிறேன். கீதைப் பேருரைகளை உங்களுக்குத் தெரியும். அதில் நான் செய்திருப்பதென்ன? கீதையின் சாரத்தை எல்லோருக்கும் புரியுமாறு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதேபோல பாகவதம் மிகவும் பெரிய புத்தகமாகையால் அதைப் படித்தல் எல்லோருக்கும் சுலபமல்ல என்பதை உணர்ந்து அதிலிருந்து 300 சுலோகங்களைப் பொறுக்கி எடுத்து வெளியிட்டிருக்கிறேன். இது கைக்கு அடக்கமான சிறிய புத்தகமாய் இருக்கிறது. இதிலும் பாதி இந்தி விளக்கம்தான். இதிலிலுள்ள சமஸ்கிருதப்பகுதியை மட்டும் பார்த்தால் மிகவும் குறைவாய் இருக்குமாகையால் இதை எல்லோரும சுலபமாகப் படிக்கலாம். நாம் ஒருவரோடொருவர் அன்பாய் இருக்கவும், வாழவும் உதவக் கூடிய ஓர் உபாயமாகும் இது.

### எளியவர்களுக்குச் சேவை

விருப்பம் இருந்தாலும் படிக்க முடியாதவர்கள், அதற்கு வேண்டிய நேரமில்லாதவர்கள் பலர் இருப்பார்களாகையால் அவர்களுக்கென நான் இன்னொரு வழியும் சொல்ல முடியும். அவர்கள் ஏழை, எளியோருக்கு தம்மாலாகும் உதவியைச் செய்யலாம். பலர் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். எளிமையில இருந்து அவதிப்படுகிறார்கள். பலவிதமான அல்லல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நம்மாலான உதவியைச் செய்யலாம். கஷ்டப்படுகிறவர்கள் எந்த சாதிக்காரர்கள், எந்த சமயத்தவர், அவர்கள் பேசும் மொழி என்ன என்பதையெல்லாம் கவனியாது துன்பத்திலிருப்பவர் யாராயிருந்தாலும அவர்கள் துன்பத்தைக் குறைப்பதற்கு நம்மால் ஆனதைச் செய்யலாம். அவர்களுக்கு உதவி ஏற்படும் வகையில் தினமும் ஏதேனும் செய்வதென்று வைத்துக் கொள்ளலாம்.

எனவே மூன்று வழிகள் உள்ளன. ஒன்று எல்லோரும் சேர்ந்தமர்ந்து மௌனப் பிரார்த்தனை செய்தல், இரண்டாவது ஒருவர் மற்றவர் மொழிகளைக் கற்றுக் கொள்ளுதலும், பிற சமயங்களின் நூல்களை படித்து உணர்தலும், மூன்றாவது ஏழை எளியோருக்கு, துயரத்தில் இருப்போருக்கு உதவி அவர்கள் சிரமத்தை நம்மால் இயன்ற அளவு குறைக்க முயலுதல்.

எல்லோரும் மன ஒருமையுடன், அன்புடன் வாழ்ந்து வருதல், ஏழைகளும் துன்புற்றோரும் இருப்பது தெரிந்ததும் அவர்களுக்கு உதவ ஓடுதல், எல்லோரும் நன்றாக இருக்க வேண்டுமென்று எண்ணுதல் என்ற இவையே சர்வோதயம் என்பது.

ஆதாரம்: கிராமராஜ்யம்

# எதுபெரிது-தேசநலனா, கட்சிநலனா

## ஒரு காந்திய வாதியின் கேள்வி

மகாத்மா காந்தி அடிகள் இலங்கைக்கு வருகை தந்து 50 ஆண்டு 1977 நவம்பரில் பூர்த்தியாகிறது. இச் சந்தர்ப்பத்தில் கூட்டுறவு மூலம் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கிராம சுயராஜ்யத்தை ஏற்படுத்துவது பற்றி நாம் எல்லோரும் சிந்திக்க கடமைப் பட்டுள்ளோம் என்று போராசிரியர் கு. நேசையா அவர்கள் 26.04.76 அன்று வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற காந்திய - சர்வோதய சிந்தனையாளரின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தபோது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

சர்வோதயம் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்துகிறது. கருத்துச் சுதந்திரமிருந்தால் தான் சிந்தனை வளர இடமுண்டாகும். இன்றைய பிரச்சினைகளை கிராம சமூகம் அமைப்பதன் மூலமே தீர்க்க முடியும்.

அடுத்து உரையாற்றிய முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் கூறியதாவது;

இன்று மக்கள் கட்சிகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் மோதிக் கொள்கிறார்கள். தேச நலத்திலும் பார்க்க கட்சி நலத்தையே பெரிதாக மதிக்கிறார்கள். இந்நிலை நீடிக்குமானால் சமாதானமாக வாழ முடியாது போக நேரிடும். கட்சிச் சார்பற்ற முறையில் சிந்திக்க மக்களைத் தூண்ட வேண்டும். இதற்கு காந்திய - சர்வோதய கருத்துக்களை மக்களிடையே வேகமாகப் பரப்ப வேண்டும். இதன் மூலமே நிர்மாணப்பணிகளைத் திறம்படச் செய்ய முடியும். நடுநிலை குழுக்களை உருவாக்க முடியும்.

திரு. ச. அ. டேவிட் பேசுகையில் மாவட்டங்கள் தோறும் குழுக்களை அமைத்து பிரசாரம் செய்ய வேண்டும். இதற்கு உதவியாக காந்திய - சர்வோதய கருத்துக்களை விளக்கி ஊழியர்களுக்கு வழிகாட்டக் கூடிய மாதிரியான 'கைநூல்' ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு. இ. இரத்தினம் கூறியதாவது,

காந்திய - சர்வோதய தத்துவ அடிப்படையில் சமூகப் புரட்சி செய்வதற்கு கருத்தரங்குகளும் நிர்மாணப் பணிகளும் தேவை. அதிகார போகத்தால் நிர்மாணப் பணிகள் தடைப்படுகின்றன. கருத்துப் புரட்சி மூலம் இதை நிவர்த்தி செய்ய வேண்டும். கைநூல் தயாரிப்பது அவசியமாகும். இது இயக்க வடிவத்தை தரும்.

திருவாளர்கள்: இ. கந்தையா, சி. க. வேலாயுதபிள்ளை, ந. சிவரஞ்சன், சோ. க. தம்பிப்பிள்ளை ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

காந்திய-சர்வோதய தத்துவத்தை செயற்படுத்தக் கூடிய வழிவகைகளை, கூறும் கைநூல் தயாரிக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

# வினோபாஜியை தரிசித்தேன்

வினோபா அடிகளைச் சந்திக்க வேண்டுமென்று பல மாதங்களாக ஆவலோடு காத்திருந்தேன். அடிகளார் தமது ஓராண்டு மௌன விரதத்தை பூர்த்தி செய்விருக்கும் காலத்தில் காந்திஜியின் சேவாக் கிராமத்தில் நடைபெறவிருக்கும் நிர்மாண ஊழியர் மகா நாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்புக் கிடைத்தது. உடனே அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கௌரவ பொதுச் செயலாளர் திரு. தி. க. வேலாயுதபிள்ளை அவர்களுடன் தொடர்பு கொண்டு சகல ஆயத்தங்களையும் செய்து, அவருடன் 1975 திசெம்பர் 14 ஆம் திகதி பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு திருச்சியை அடைந்தோம் பின் சென்னைக்குச் சென்று அங்கிருந்து 23 ஆம் திகதி புறப்பட்டு மறு நாள் நண்பகல் வார்தா சென்றோம். எங்களுடன் பல தென்னாட்டு ஊழியர்களும் பயணம் செய்தமையால், அவர்கள் மூலம் காந்தீய - சர்வோதய தத்துவங்கள் செயல்படும் முறையையும் வினோபா அடிகளின் வழிகாட்டுதல் பற்றியும் நன்கு அறியக் கூடியதாக இருந்தது.

காந்தி அடிகளுக்குப் பின் அவருக்குச் சமமான தலைவராக இன்று வினோபா அடிகள் நமக்கு கிடைத்திருப்பது நாம் செய்த பாக்கியமாகும். பத்து வயதில் வினோபாஜீ தமது தாயிடமிருந்து பின் வரும் உபதேசத்தைப் பெற்றார்,

''வினியா, நீ மணம் புரிந்தால் ஒரு தலைமுறையைக் காப்பாற்றுவாய். மணம் புரியா விட்டாலோ ஏழு தலைமுறை காக்கப் பெறும்.''

இவ்வுபதேசத்தின் பெறுபேருகப் போலும் வினோபாஜீ தமது 16 ஆம் வயதில் இமயத்தை நோக்கிப் புறப்பட நேரிட்டது. மண்ணாசையை வெறுத்த வினோபா அடிகள் இலட்சக்கணக்கான மக்களுக்கு மண் வாங்கித்தந்துள்ளார்.

திசெம்பர் 25 ஆம் திகதி ஏசுநாதர் பிறந்த நன்னாள். இப்புனித தினமான 1974 திசெம்பர் 25 இல் வினோபாஜீ ஆரம்பித்த மௌன விரதத்தை 1975 திசெம்பர் 25 இல் பூரணப்படுத்தினார். இத் தினத்தில் வினோபா அடிகளைத் தரிசிக்கும் ஆவலுடன் சேவாக் கிராமத்திலிருந்து வினோபா அடிகள் தவம் புரியும் பவனார் ஆசிரமத்திற்கு சென்றோம்.

பவனார் ஆசிரம வாயிலை அடைந்ததும் அங்குள்ள அலங்காரங்களைக் கண்டு மகிழ்ந்தோம். ஆசிரமத்தினுள் நுழைந்ததும், நூற்றுக்கணக்கான மக்கள் ஓர் அறை முன் திரண்டு நின்று வணக்கம் செலுத்திக் கொண்டிருப்பதைக் கண்டோம். நாம் அவ்விடம் சென்று 6 அடி நீளமும் 3 அடி அகலமுமுடைய கட்டிலில் உடல் முழுவதும் போர்த்திய கோலத்திலிருந்த பூதான முனிவரைத் தரிசித்தோம். அப்பொழுது பவுனாரில் இரவு அதிக குளிராகவும், பகல் அதிக வெப்பமாகவும் இருந்தமையால் பாபா இன்னும் துயிலெழவில்லை யென்பதை அறிந்தோம். ''பாபாவை இன்று யாரும் சந்திக்க முடியாது'' என்ற அறிவித்தலைக் கேட்டுக் கவலையுற்றோம்.

இச் சந்தர்ப்பத்தில், இலங்கையில் சர்வோதய பாதயாத்திரை செய்த சகோதரிகளின் நினைவு வந்தது. இவர்கள் ஆசிரமத்திலிருப்பதாக அறிந்து அவர்களிருக்குமிடத்தை அடைந்தோம். அவர்கள் எங்களைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். செல்வி. இலட்சுமி கொஞ்சு தமிழில் உரையாடி பாபாவைத் தரிசிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தார்.

நாங்கள் பாபாவைத் தரிசிக்கச் செல்லவும் பாபா படுக்கையை விட்டெழுந்து வெளியில் வரவும் சரியாயிருந்தது. அவர் தமது உடலில் அணிந்திருந்த மேல் அங்கியை எடுத்து விட்டு சூரிய ஒளி படுமபடியாக வெளியில் அமர்ந்து கொண்டார். நாங்கள் இலங்கையிலிருந்து வந்திருக்கிறோம் என் பாத எழுத்து மூலம் தெரிவித்து வணங்கினோம். எமது வணக்கத்தினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட பாபா நாம் கொடுத்த அன்புப் பரிசுகளை ஏற்றுக் கொண்டதுடன், மில்க் வைற் அதிபர் திரு. க. கனகராசா அவர்கள் பாபாவிடம் கொடுக்குமாறு எம்மிடம் கொடுத்த தாளத்தையும் பெற்று, எம் முன்னிலையிலேயே அதைப் பரீட்சித்துத் தமது பொக்கை வாய்ச் சிரிப்பின் மூலம் திருப்தியைத் தெரிவித்துக் கொண்டார். தமிழ் கீதைப் பேருரையில் பாபாவின் ஒப்பத்தைப் பெற்றுக் கொண்டு விடை பெற்றோம்.

பின் சகோதரி இலட்சுமி ஆசிரமத்தைச் சுற்றிக் காட்டினார். ஆசிரமத்தில் படித்த மேதைகள் பலர் இருப்பதுடன் யாவரும் உழைப்பிலீடுபடுகிறார்கள். உழைக்காமல் உண்பதில்லை என்னும் விரதத்தை எல்லோரும் கடைப்பிடிக்கிறார்கள். இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த போதிலும் அமைதியையும் சுத்தத்தினையும் ஒழுக்கத்தினையும் கண்ணுற்ற போது நாம் ஒரு புத்துலகிலிருப்பது போன்ற உணர்ச்சியைப் பெற்றோம். சகோதரி இலட்சுமிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு பாபாவின் அருளுரையினைக் கேட்பதற்கு காந்தி நினைவு மண்டபத்திற்கு விரைந்தோம்.

குறித்த நேரத்தில் கூட்டத்திற்கு பாபா வந்ததும் கண்ணனின் 1008 நாமங்கள் இசையுடன் ஓதப்பட்டன. மகாராஷ்டிர முதல் அமைச்சரின் உரைக்குப் பின் பாபா தமது கணீரென்ற குரலில் உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது,

சர்வோதய இயக்க ஊழியர்கள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். மக்களின் துன்பத்தைத் துடைக்கும் வகையில் சேவைகள் அமையவேண்டும். ஹரிசனங்களின் முன்னேற்றம் குறித்து தீவிரமாக ஆலோசித்துச் செயல்படுவதுடன் பிரதமரின் நேரடி கண்காணிப்பில் விவசாய அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையும் அகிம்சையும் மக்கள் மன்றத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் தி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் இரத்மலானை அல்றரா அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
Registered at the G. P. O. as a Newspaper in Ceylon